1474

சுதேச கீதத் திரட்டு

கவியரசு

ஸ்ரீ சி. சுப்பிரமணிய பாரதி.

“பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவானிலும் நனி சிறந்தனவே”

பாரதி பிரசுராலயம்,
திருவல்லிக்கேணி, சென்னை.
1931

[விலை 0-0-6

0,1M5U,S
N31
120684

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் சரித்திரச் சுருக்கம்.

கவியரசு ஸ்ரீ பாரதியார், எட்டயபுரத்தில், 1882-வது வருஷம் கார்த்திகை மாதத்தில் அவதரித்தார், இவர் தந்தையின் பெயர் ஸ்ரீ சின்னசாமி அய்யர்; தாயின் பெயர் லெக்ஷிமி அம்மாள். இருவரும் நற்குடியும் நற்குணமும் உடையவர்கள். வெகுபாலியத்தில் பாரதியார் தாயையிழந்து விட்டார்.

பாரதியார் பிள்ளைப் பருவத்திலேயே பாஷையிலும் கணிதமுதலிய சாஸ்திரங்களிலும் சிறந்து விளங்கினார், பதினைந்தாமாண்டுவரையில் எட்டயபுரத்தில் தங்கியிருந்தார்.

1897-ம் வருஷத்தில் அவருக்கு விவாகம் நடந்தது. இதற்கு மறு வருஷத்தில் அவர் தந்தை தேகவியோகமானார். திருநெல்வேலி ஹிந்து கலாசாலையில் 3 வருஷம் பயின்றார். பின் காசிக்குப்போனார். திரும்பி வந்து கொஞ்சநாளில் 'சுதேசமித்திரன்' உதவி பத்திராதிபராயிருந்தும், 'பால பாரதம்' "இந்தியா" முதலிய தேசியப்பத்திரிகைகளை நடத்தித் தமிழ் நாட்டிற்குப் புத்துயிர் அளித்தும் வந்தார். தேசியகீதம் பலவியற்றி வெளியிட்டார்.

அதன்பின் புதுச்சேரியில் சென்று 10 வருஷம் தங்கியிருந்தார். இக்காலத்தில் தான் அவர் அளவற்ற நூல்களை இயற்றினார். 1918-ம் வருஷம் அவர் தாமாக வெளிவந்தார், போலீசாரால் உடனே கைது செய்யப்பட்டு விடுதலையும் செய்யப்பட்டார். இவர் தேகநிலை பலருக்குக் கவலை தந்து கொண்டிருந்தது.

இறுதியாக, மறுபடியும், இவர் சென்னையில் 'சுதேசமித்ரன்' பத்திரிகைக்குத் துணையாசிரியராய் அமர்ந்தார், நாள்தோறும் இவர் தேகபலம் குறைந்து கடைசியாக 1921-ம் வருஷம் செப்டம்பர்மீ 11உ சென்னை திருவல்லிக்கேணியில் இவர் உயிர் துறந்தார்.

தமிழிலக்கிய மறுமலர்ச்சிக்குக் காரணபூதராய் விளங்கிய கவியரசு ஸ்ரீ பாரதியார் கீதங்களைப்பேணித் தமிழுலகு முழுதும் பரவும்படி செய்ய வேண்டியதே தமிழர் கடமை, பாரதியார் புகழ் நீடுவாழ்க !

ஓம் சக்தி.

வந்தே மாதரம்.

தாயுமானவர் ஆனந்தக்களிப்பு மெட்டு.

ராகம்—நாதநாமக் கிரியை. தாளம்—ஆதி.

பல்லவி.

வந்தே மாதர மென்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குது மென்போம்.
(வந்தே)

சரணங்கள்.

க. ஜாதி மதங்களைப் பாரோம்—உயர்
ஜன்ம மித்தேசத்தி லெய்தின ராயின்
வேதிய ராயினு மொன்றே—அன்றி
வேறு குலத்தின ராயினு மொன்றே.
(வந்தே)

உ. ஈனப் பறையர்க ளேனும்—அவர்
எம்முடன் வாழ்ந்திங் கிருப்பவ ரன்றோ?
சீனத்த ராய்விடு வாரோ?—பிற
தேசத்தர் போற்பல தீங்கிழைப்பாரோ?
(வந்தே)

௩. ஆயிர முண்டிங்கு ஜாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி ?—ஓர்
தாயின் வயிற்றிற் பிறந்தோர்—தம்முட்
சண்டை செய்தாலும் சகோதர ரன்றோ ?
(வந்தே)

௪. ஒன்று பட்டா லுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் ?
(வந்தே)

௫. எப்பதம் வாய்த்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கு மந்த நிலை பொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்.
(வந்தே)

௬. புல்லடிமைத் தொழில் பேணிப்—பண்டு
போயின நாட்களுக் கினி மனம் நாணித்
தொல்லை யிகழ்ச்சிகள் தீர—இந்தத்
தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி.
(வந்தே)

1985
0954

சுதந்திரப் பெருமை

“ தில்லைவெளியிலே சேர்ந்துவிட்டாலவர்
திரும்பியும் வருவாரோ ” என்ற மெட்டு.

க. வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசை கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்து வாரோ ? (வீர)

உ. புகழுநல் லறமுமே யன்றியெல்லாம் வெறும்
பொய்யென்று கண்டாரேல்—அவர்
இகழுறு மீனத்தொண் டியற்றியும் வாழ்வதற்
கிச்சையுற் றிருப்பா ரோ ? (வீர)

ந. பிறந்தவர் யாவரு மிறப்ப துறுதியெனும்
பெற்றியை யறிந்தாரேல்—மானம்
துறந்தற மறந்தும்பின் னுயிர்கொண்டு வாழ்வது
சுகமென்று மதிப்பாரோ ? (வீர)

ச. மானுட ஜன்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மையை யுணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினு முண்மை நிலைதவற
உடன்படு மாறுளதோ ? (வீர)

ரு. விண்ணி லிரவிதனை விற்றுவிட்டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ ?—
கண்ணிலு மினிய சுதந்திரம் போனபின்
கைகட்டிப் பிழைப்பாரோ ? (வீர)

சு. மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்திரத்தின்
மாண்பினை யிழப்பாரோ ?
கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கினாற்
கைகொட்டிச் சிரியாரோ ? (வீர)

எ. வந்தே மாதர மென்று வணங்கிய பின்
மாயத்தை வணங்குவாரோ ?
வந்தே மாதர மொன்றே தாரக
மென்பதை மறப்பாரோ ?

தேசபக்தன் ஆங்கிலேயனுக்குக் கூறும் மறுமொழி.

க. சொந்த நாட்டிற் பரர்க்கடிமை செய்தே
துஞ்சிடோம்-இனி-யஞ்சிடோம்
எந்த நாட்டினு மிந்த அநீதிகள்
ஏற்குமோ ?-தெய்வம்-பார்க்குமோ ?

உ. வந்தே மாதர மென்றுயிர் போம்வரை
வாழ்த்துவோம்-முடி-தாழ்த்துவோம்
எந்த மாருயி ரன்னையைப் போற்றுதல்
ஈனமோ ?-அவ-மானமோ ?

ங. பொழுதெல்லா மெங்கள் செல்வங் கொள்ளை
போகவோ ?-நாங்கள்-சாகவோ ? [கொண்டு
அழுது கொண்டிருப்போமோ ? ஆண்பிள்ளை
அல்லமோ ?-உயிர்-வெல்லமோ ? [கள்

ச. நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ ?-பன்றிச்-சேய்களோ ?
நீங்கள் மட்டு மனிதர்க ளோவிது
நீதமோ ?-பிடி-வாதமோ ?

ரு. பார தத்திடை யன்பு செலுத்துதல்
பாபமோ ?-மனஸ்-தாபமோ ?
கூறு மெங்கள் மிடிமையைத் தீர்ப்பது
குற்றமோ-இதிற்-செற்றமோ ?

சு. ஒற்றுமை வழி யொன்றே வழியென்ப
தோர்ந் திட்டோம்-நன்கு-தேர்ந்திட்டோம்
மற்று நீங்கள் செய்யுங் கொடுமைக்கெலா
மலைவுறோம்-சித்தம்-கலைவுறோம்

எ. சதையைத் துண்டு துண் டாக்கினு முன்னெண்
சாயுமோ ?-ஜீவன்-ஓயுமோ ? [ணம்
இதையத் துள்ளே யிலங்கு மஹாபக்தி
யேகுமோ ?-நெஞ்சம்-வேகுமோ ?

மாதாவின் துவஜம்.

பாரத நாட்டுக் கொடியினைப் புகழ்தல்.

தாயுமானவர் ஆனந்தக் களிப்பு வர்ணமெட்டு.

பல்லவி.

தாயின் மணிக்கொடி பாரீர்—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட—வாரீர்?

சரணங்கள்.

க. ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின்மேல் வந்தே மாதர மென்றே
பாங்கி னெழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பரந்தது பாரீர்! (தாயின்)

உ. பட்டுத் துகிலென லாமோ?—அதிற்
பாய்ந்து சுழற்றும் பெரும்புயற் காற்று
மட்டு மிகுந்தடித் தாலும்—அதை
மதியாதவ் வுறுதிகொள் மாணிக்கப் படலம்.
(தாயின்)

ங. இந்திரன் வச்சிர மோர் பால்—அதில்
எங்கள் துருக்கரிளம்பிறை யோர்பால்தாய்
மந்திர நடுவுறத் தோன்றும்—அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ?
(தாயின்)

ச. கம்பத்தின் கீழ் நிற்றல் காணீர்—எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக் கூட்டம்
நற்பற் குரிய ரவ்வீரர்—தங்கள்
நல்லுயி ரீந்துங் கொடியினைக் காப்பார்.
(தாயின்

௫. அணியணி யாயவர் நிற்கும் இந்த
ஆரியக் காட்சியோ ரானந்த மன்றோ ?
பணிகள் பொருந்திய மார்பும்—விறற்
பைந்திரு வோங்கும் வடிவமுங் காணீர் !
(தாயின்)

௬. செந்தமிழ் நாட்டுப் பொருநர்—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்றன் வீரர்
சிந்தை துணிந்த தெலுங்கர்—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர்,
(தாயின்)

௭. கன்னட ரொட்டிய ரோடு—போரிற்
காலனு மஞ்சக் கலக்கு மராட்டர்
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடை யாரிந்து ஸ்தானத்து மல்லர்,
(தாயின்)

௮. பூதல முற்றிடும் வரையும்—அறப்
போர் விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவரும் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,
(தாயின்)

௯. பஞ்ச நதத்துப் பிறந்தோர்—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்
துஞ்சும் பொழுதினுந் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தினோரும்,
(தாயின்)

௧௦. சோர்ந்தவரைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க !
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவஜம் சிறப்புற வாழ்க ! (தாயின்)

வாழ்க திலகன் நாமம்.

பல்லவி.

வாழ்க திலகன் நாமம்! வாழ்க! வாழ்கவே!
வீழ்க கொடுங் கோன்மை! வீழ்க! வீழ்கவே!

சரணங்கள்.

க. நாலுதிசையும் ஸ்வாதந்தரிய நாதம் எழுகவே!
நரக மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே!
ஏலு மனிதர் அறிவை யடர்க்கும் இருள் அழிகவே
எந்த நாளும் உலக மீதில் அச்சம் ஒழிகவே!
(வாழ்க)

உ. கல்வி யென்னும் வலிமைகொண்ட கோட்டை
[கட்டினன்—நல்ல
கருத்தினு லதனைச்சூழ்ந்தொ ரகழி வெட்டினன்
சொல் விளக்க மென்றதனிடைக் கோயிலாக்கினன்
ஸ்வாதந்தர்ய மென்றதன் மேற் கொடியைத்
தூக்கினன் (வாழ்க)

ந. துன்ப மென்னும் கடலைக் கடக்குந் தோணி
யவன் பெயர்
சோர் வென்னும் பேயை யோட்டுஞ் சூழ்ச்சி
யவன் பெயர்
அன் பெனுந்தேன் ஊறித் ததும்பும் புதுமலர்
அவன் பேர்
ஆண்மை யென்னும் பொருளைக் காட்டும் அறிகுறி
யவன் பேர் (வாழ்க)

ஸ்ரீ கிருஷ்ண ஸ்தோத்திரம்.

கவிகள்.

ராகம்—கமாஸ். தாளம்—ஆதி.

க. என்று தணியு மிந்த சுதந்திர தாகம்?
என்று மடியு மெங்கள் அடிமையில் மோகம்?
என்றெம தன்னை கை விலங்குகள் போகும்?
என்றெம தின்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?
அன்றொரு பாரதமாக்க வந்தோனே,
ஆரியர் வாழ்வினை யாதரிப் போனே!
வென்றி தருந் துணை நின்னருளன்றோ
மெய்யடியோ மின்னும் வாடுதல் நன்றோ?

உ. பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?
தஞ்ச மடைந்த பின் கைவிடலாமோ?
தாயுந்தன் குழந்தையைத் தள்ளிடப் போமோ?
அஞ்சலென் றருள்செயுங் கடமை யில்லாயோ?
ஆரிய நீயுநின் அறமறந் தாயோ?
வெஞ்செய லரக்கரை வீட்டிடுவோனே
வீரசிகாமணி, ஆரியர் கோனே.

விடுதலை.

(பிலஹரி)

விடுதலை! விடுதலை! விடுதலை!

க. பறையருக்கு மிங்கு தீயர் புலையருக்கும் விடுதலை!
பரவரோடு குறவருக்கு மறவருக்கும் விடுதலை
திறமைகொண்டதீமையற்ற தொழில்புரிந்துயாவரும்!
தேர்ந்தகல்வி, ஞான மெய்திவாழ்வ மிந்த நாட்டிலே
(விடுதலை)

உ. ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை! ஜாதியில்
இழிவுகொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே
வாழி கல்வி செல்ல மெய்தி மனமகிழ்ந்து கூடியே
மனிதர்யாரு மொரு நிகர் ஸமானமாக வாழ்வமே
(விடுதலை)

ங. மாதர் தம்மை யழிவு செய்யு மடமையைக் கொளுத்துவோம்
வையவாழ்வுதன்னிலெந்த வகையிலும் நமக்குளே
தாதரென்ற நிலைமைமாறி யாண்களோடு பெண்களும்
சரிநிகர், ஸமானமாக வாழ்வமிந்த நாட்டிலே
(விடுதலை)

செந்தமிழ் நாடு.

க. செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே-எங்கள்-(செந்தமிழ்)

உ. வேதம் நிறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் செறிந்த தமிழ்நாடு—நல்ல
காதல் புரியும் அரம்பையர் போலிளங்
கன்னியர் சூழ்ந்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

ங. காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்ட தோர் வையை பொருனை நதி—யென
மேவிய யாறு பல வோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

ச. முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ப்புறக் காக்குந் தமிழ்நாடு—செல்வம்
எத்தனை யுண்டு புவி மீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

ரு. நீலத் திரைக்கட லோரத்திலே—நின்று
நித்தந் தவஞ் செய் குமரி யெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ் நாடு. (செந்தமிழ்)

சு. கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ் நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு. (செந்தமிழ்)

எ. வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ் நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி கார மென்றோர்மணி
யாரம் படைத்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

அ. சிங்களம் புட்பகம் சாவக—மாதிய
தீவு பலவினுஞ் சென்றேறி—அங்கு
தங்கள் புலிக் கொடி மீன் கொடியும் நின்று
சால்புறக் கண்டவர் தாய் நாடு. (செந்தமிழ்)

கூ. விண்ணை யிடிக்கும் தலை யிமயம்—எனும்
வெற்பை யடிக்கும் திறனுடையார்—சமர்
பண்ணிக் கலிங்கத் திருள் கெடுத்தார் தமிழ்ப்
பார்த்திவர் நின்ற தமிழ் நாடு. (செந்தமிழ்)

கo. சீன மிசிரம் யவன ரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ் வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும் மிக
நன்று வளர்த்த தமிழ் நாடு. (செந்தமிழ்)

அச்சமில்லை.

(பண்டாரப் பாட்டு)

க. அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே
இச்சகத்து ளோரெலாம்
எதிர்த்து நின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

துச்சமாக வெண்ணி நம்மைத்
தூறு செய்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

பிச்சை வாங்கி யுண்ணும் வாழ்க்கை
பெற்றுவிட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

இச்சை கொண்ட பொருளெலா
மிழந்து விட்ட போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

உ. கச்சணிந்த கொங்கை மாதர்
கண்கள் வீசு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

நச்சை வாயி லேகொணர்ந்து
நண்பரூட்டு போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

பச்சையூ னியைந்த வேற்
படைகள் வந்த போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

உச்சிமீது வானிடிந்து
வீழுகின்ற போதினும்
அச்சமில்லை யச்சமில்லை
அச்சமென்ப தில்லையே.

பாரத ஜனங்களின் தற்கால நிலைமை.

(நொண்டிச் சிந்து.)

க. நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
அஞ்சி யஞ்சிச் சாவார்—இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே
வஞ்சனை பேய்க ளென்பார்—இந்த
மரத்தி லென்பார்; அந்தக் குளத்திலென்பார்;
துஞ்சுவது முகட்டிலென்பார்—மிகத்
துயர்ப்படுவார் எண்ணிப் பயப்படுவார். (நெஞ்சு)

உ. மந்திரவாதி யென்பார்—சொன்ன
மாத்திரத்தி லே மனக் கிலிபிடிப்பார்
யந்திர சூனியங்கள்—இன்னும்
எத்தனை யாயிரம் இவர் துயர்கள்!
தந்த பொருளைக் கொண்டே—ஜனந்
தாங்குவ ருலகத்தில் அரசரெல்லாம்
அந்த அரசியலை—இவர்
அஞ்சுதரு பேயென்றெண்ணி நெஞ்ச மயர்வார்
(நெஞ்சு)

ந. சிப்பாயைக் கண்டஞ்சுவார்—ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
துப்பாக்கி கொண்டொருவன்—வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்
அப்பாலெவனோ செல்வான்—அவன்
ஆடையைக் கண்டு பயந் தெழுந்து நிற்பார்
எப்போதும் கைகட்டுவார்—இவர்
யாரிடத்தும் பூனைகள்போ லேங்கி நடப்பார்.
(நெஞ்சு)

ச. நெஞ்சு பொறுக்குதிலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள்—ஒரு
கோடியென்றால் அது பெரிதாமோ?

ஐந்துதலைப் பாம்பென்பான்—அப்பன்
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார்—பின்பு
நெடுநா ளிருவரும் பகைத்திருப்பார்.
(நெஞ்சு)

ரு. சாத்திரங்க ளொன்றுங் காணார்—பொய்ச்
சாத்திரப் பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே
கோத்திரம் ஒன்றாயிருந்தாலும்—ஒரு
கொள்கையிற் பிரிந்தவனைக் குலைத்திகழ்வார்
தோத்திரங்கள் சொல்லியவர் தாம்—தமைச்
சூது செய்யும் நீசர்களைப் பணிந்திடுவார்
ஆத்திரங் கொண்டே யிவன் சைவன்—இவன்
அரிபக்தனென்று பெருஞ் சண்டையிடுவார்.
(நெஞ்சு)

சு. நெஞ்சு பொறுக்குதிலையே—இதை
நினைந்து நினைந்திடினும் வெறுக்குதிலையே
கஞ்சி குடிப்பதற்கிலார்—அதன்
காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்
பஞ்சமோ பஞ்சமென்றே—நிதம்
பரதவித்தே உயிர் துடிதுடித்து
துஞ்சி மடிக்கின்றாரே—இவர்
துயர்களைத் தீர்க்க வோர் வழியிலையே.
(நெஞ்சு)

எ. எண்ணிலா நோயுடையார்—இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தைகள்போல்—பிறர்
காட்டிய வழியிச் சென்று மாட்டிக்கொள்வார்
நண்ணிய பெருங்கலைகள்—பத்து
நாலாயிரங் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்.
(நெஞ்சு)

புது வருஷம்.

ஆசிரியப் பா.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்!
வாழிய பாரத மணித் திரு நாடு!
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க!
நன்மை வந் தெய்துக! தீதெலாம் நலிக!
அறம் வளர்ந்திடுக! மறம் மடிவுறுக!
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக!
நந்தேயத்தினர் நாடொறும் உயர்க!
வந்தே மாதரம்! வந்தே மாதரம்!

ஹிந்தி பிரசார் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

புதிய பதிப்பு! மலிந்த விலை!

பாரதி நூல்கள்.

			ரூ.	அ.	பை.
	1.	தேசிய கீதங்கள் ...	0	4	0
†	2.	தோத்திரப் பாடல்கள் (Approved) ...	0	5	0
‡	3.	வேதாந்தப் பாடல்கள் (,,) ...	0	4	0
	4.	விநாயகர் நான்மணி மாலை, கண்ணன் பாட்டு.	0	4	0
	5.	புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு, பாரதி அறுபத்தாறு ...	0	2	6
	6.	காட்சி ...	0	3	0
	7.	குயில் ...	0	2	6
†	8.	பாஞ்சாலி சபதம் (Approved) ...	0	8	0
	9.	பகவத்கீதை ...	0	8	0
	10.	ஞானரதம் ...	0	4	0
	11.	சித்தக் கடல், Stray Thoughts, ஜகத் சித்ரம், விடுதலை ...	0	2	0
	12.	பதஞ்சலியோக ஸூத்ரம், வேத ரிஷிகளின் கவிதை, கீதை முன்னுரை ...	0	6	0
‡	13.	சந்திரிகையின் கதை (Approved) ...	0	8	0
†	14.	நவதந்திரக் கதை (,,) ...	0	6	0
	15.	தராசு ...	0	4	0
‡	16.	கதைக்கொத்து (,,) ...	0	8	0
	17.	வியாசங்கள் ...	அச்சில்		
	18.	பாரதியார் (Photo) படம் ...	0	12	0
	19.	Bharati & his works by C. Viswanathan, B.A., L.T. ...	0	4	0

பாரதியார் சரித்திரம்	0	1	0	பாப்பா பாட்டு	0	0	3
முரசு	0	0	6	ஆத்திசூடி	0	0	6

பாரதி பிரசுராலயம்,

திருவல்லிக்கேணி, சென்னை.

† Approved by the Text Book Committee for School use.

‡ ,, ,, ,, Libraries.

திருவல்லிக்கேணி
ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில்,
பதிப்பிக்கப்பட்டது.